செ.வெ.எண்: 411/2016 நாள்: 30.06.2016

# செய்தி குறிப்பு

இராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற முன்னாள் படை வீரர்களின் சிறார்களுக்கு தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படும் கல்வி உதவித் தொகை இவ்வாண்டும் கீழ் குறிப்படப்பட்டுள்ள கல்விகளுக்கு வழங்கப்படவுள்ளதால் தகுதியுடையோர் 15.10.2016-க்குள் உரிய படிவம் பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பிக்கலாம் என மாவட்ட முன்னாள் படை வீரர் நல துணை இயக்குநர் மேஜர் (ஓய்வு) வா.ஸ்ரீ.ஜெயகுமார் தெரிவித்துள்ளார்.

1. கல்லூரி முதுநிலை பட்டப்படிப்புகள், தொழிற்கல்விகளான ஐ.டி.ஐ மற்றும் பாலிடெக்னிக் போன்ற படிப்புகள்

2. 12-ம் வகுப்பு பொதுத்தேர்வில் 60% க்கு குறைவான மதிப்பெண் பெற்று 2015-'16- ஆம் கல்வியாண்டில் முதலாமாண்டு BE, B.Tech, MBBS போன்ற தொழிற்கல்வியில் சேர்ந்தவர்கள்

மேலும் 12-ம் வகுப்பு பொதுத்தேர்வில் 60% க்கு மேல் மதிப்பெண் பெற்று 2015-'16-ஆம் கல்வியாண்டில் முதலாமாண்டு BE, B.Tech, MBBS போன்ற தொழிற்கல்வியில் சேர்ந்தவர்கள் பாரத பிரதமரின் கல்வி உதவித் தொகை பெற விண்ணப்பம் செய்திட www.ksb.gov.in என்ற இணைய தளத்தில் கல்லூரி துவங்கிய பின்னர் விண்ணப்பிக்கவும்.

துணை இயக்குநர்

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.